REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 6உ செவ்வாய் (22—11—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 7உ புதன் (23—11—55) [இதழ் 137

ஆசிரியர்கள் நலனுக்குத் திட்டம்

கல்வித்துறை அதிகாரி அறிவிப்பு

பிராவிடண்ட் நிதி, பென்ஷன், இன்ஷ்யூரன்ஸ் ஆகியவை சேர்ந்த கூட்டுத் திட்டத்தின்கீழ் எல்லா ஆசிரியர்களையும் உட்படுத்துவது குறித்து சர்க்கார் ஆலோசித்துக் கொண்டுவருவதாகவும், விரைவிலேயே ஆசிரியர்களுக்கு நல்லதோர் வாழ்வு மலரப் போவதாகவும் சென்னை மாநில கல்வித் துறை இலாகா டைரக்டர் திரு. என். டி. சுந்தரவடிவேலு கும்பகோணத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

காங்கிரஸ் அகிம்சை காற்றில் பறக்கிறது!

பம்பாய் ஆட்சியின் பேய்க்கூத்து!

பத்து பேர் பலி! முன்னூறு நபர் படுகாயமுற்றனர்!

டில்லி ஆதிபத்தியத்திற்கு மராட்டியர் தரும் பதில்

பம்பாய், நவ. 21—

மகாராஷ்டிர மாநிலக் கோரிக்கையினை ஆதரித்து, பம்பாய் தொழிற் சங்கங்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டங்களின் விளைவாக, இன்று, பம்பாய் நகரம் முழுவதுமே கொலைக்களமாகக் காட்சி தந்திருக்கிறது. இந்த ஆர்ப்பாட்டங்களின் விளைவாக 10 பேர் கொல்லப்பட்டனர் என்றும், போலீசாரின் துப்பாக்கிக் குண்டுகளுக்கு இரையாகி 108 பேர் காயமுற்றனர் என்றும், மற்றும் 200-க்கு அதிகமானோர் காயம்பட்டனரென்றும் தெரியவருகிறது.

ஆர்ப்பாட்ட நிகழ்ச்சி, பம்பாய் நகரின் மத்தியப் பகுதியான பிளோரா பௌண்டன் என்ற இடத்தில்தான் உச்சக் கட்டத்தை அடைந்திருக்கிறது. தென் பகுதி இராணுவ அதிகாரியான ஜெனரல் திம்மையா, கூர்க்கத் துருப்புகளுடன் இந்த இடத்திற்கு விரைந்து சென்றிருக்கிறார்.

ஆர்ப்பாட்டத்தின் நிலை மிகமிகப் படுமோசமானதாக இருந்தது என்று, நகரைச் சுற்றி ஹெலிகாப்டர் விமானத்தின் மூலம் பார்வையிட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனர். கம்யூனிஸ்டு, சோஷலிஸ்டு ஆதரவாளர்களைக்கொண்ட அந்த ஆர்ப்பாட்டக்காரர்கள், சட்ட சபை(மேல் சபைக்)கட்டடத்திற்கு வெகு அருகாமையில் மிகுந்த உக்கிரமாகத் திரண்டனர் என்றும் அவர்கள் தெரிவித்திருக்கின்றனர். கூட்டத்தின் ஆக்கிரமிப்பைச் சமாளிக்க முடியாத போலீசார், பல இடங்களில் பல முறைகள் துப்பாக்கிப் பிரயோகங்களும், கண்ணீர்ப் புகைப் பிரயோகங்களும், தடியடிப் பிரயோகங்களும் நடத்தியிருக்கின்றனர். ஆர்ப்பாட்டக்காரர்களும், போலீசார்மீது கற்களை வாரி வாரி வீசினராம். அத்துடன் மட்டுமல்லாமல், பொதுப் போக்குவரத்துக்களுக்கு எண்ணற்ற இடையூறுகள் விளைவித்தனர் என்றும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இன்று முழுதும் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் 8 போக்குவரத்து பஸ்களும், ஒரு சர்க்கார் லாரியும் தீக்கிரையாக்கப்பட்டனவாம்; மற்றும், பல பஸ்களில் பொருத்தப்பட்டிருந்த கண்ணாடி ஜன்னல்கள் போன்

(4-ம் பக்கம் பார்க்க.)

ரூ. 5 இலட்சம் நஷ்டமாம்!

பம்பாய், நவ. 21—

பம்பாய், முனிசிபல் டஸ் சர்வீஸ் அதிகாரியொருவர் இன்றைய அமளியில் மொத்தம் ரூ. 5 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று கூறினர்.

'8 இரண்டு மாடி பஸ்கள் எரிந்தன. கல்லடியில் 160 பஸ்கள் சேதமாயின. 15 டிராம்கள் அதிக சேதமடைந்தன' என்றும் அவர் குறிப்பிட்டார்.

104 சட்ட சபை உறுப்பினர்கள் விலகிக்கொள்வராம்!

மகாராஷ்டிர காங்கிரஸ் உறுப்பினர்கள் முடிவு

பம்பாய், நவ. 21—

பம்பாய் மாநில சட்டசபை மகாராஷ்டிர காங்கிரஸ் உறுப்பினர்கள் 104 பேர், தங்களது சட்டசபை உறுப்பினர்கள் பதவிகளினின்றும் விலகிக்கொள்வதாகக் குறிப்பிட்ட விலகல் கடிதங்களை, மகாராஷ்டிர காங்கிரஸ் குழுத் தலைவரிடம் கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மகாராஷ்டிரத்தைச் சேர்ந்த இந்த 104 பேர்களைத் தவிர, பம்பாய் நகரத் தொகுதிகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மற்றும் ஆறு பேர்களும் தங்களது விலகல் கடிதத்தை பம்பாய் பிரதேச காங்கிரஸ் கமிட்டியிடம் சமர்ப்பித்துவிட்டதாகத் தெரிகிறது.

சட்ட சபை உறுப்பினர் பதவிகளினின்றும் விலகிக்கொண்ட இந்த காங்கிரஸ் உறுப்பினர்களில் 10 பேர் மேல் சபையைச் சேர்ந்தவர்கள் என்றும், மற்றையோர் அனைவரும் கீழ் சபையினர் என்றும், அவர்களுள் அமைச்சர்களும், துணை அமைச்சர்களும் அடங்கியுள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

புதுடில்லியிலுள்ள காங்கிரஸ் பார்லிமெண்டரி குழுவிடம், இந்த விலகல் கடிதங்களையெல்லாம் கொடுக்கவேண்டிய வேலை பிரதேசக் காங்கிரஸ் குழுவிடம்தான் இருக்கிறது என்றும், மகாராஷ்டிரக் காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள் விலகுதலை, பார்லிமெண்டரி குழு ஏற்றுக்கொண்டால்; அவற்றை, சட்ட சபைகளின் (மேல், கீழ் சபைகள்) தலைவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று நடைபெற்ற சட்ட சபைக் கூட்டத்திற்குப் பின்னர், மகாராஷ்டிரக் காங்கிரஸ் உறுப்பினர்கள் மேற்கொண்ட கூட்டம் ஒன்றில்தான் தங்கள் பதவிகளை இராஜினாமாச் செய்வதென்று முடிவு செய்திருக்கின்றனர்

பம்பாய் மாநில சட்ட சபையில் (கீழ் சபை) மொத்தம் 316 பேர்களில் 270 உறுப்பினர்களைக் காங்கிரஸ் கொண்டிருக்கிறது. இந்த 270 பேரிலும் 118 பேர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்களாவர். அதுபோலவே மேல் சபையிலும் மொத்தம் 72 பேர்களில் 56 பேர்கள் காங்கிரஸ்காரர்கள்; அவர்களுள் 22 பேர் மகாராஷ்டிரத்தைச் சேர்ந்தவர்கள்.

தனி மாநிலமாகவே விதர்ப்பம் இருக்கவேண்டுமாம்!

"விதர்ப்பம் ஒரு தனி மாநிலமாகவே இருக்கவேண்டும்; மராட்டியத்துடன் இணையக் கூடாது"

என்று மகாவிதர்ப்ப பரிஷத்தின் தனிக் கூட்டம் ஒன்றில் மீண்டும் வலியுறுத்தப்பட்டிருக்கிறது.

கூட்டத்திற்கு மத்திய பிரதேச சுகாதார இலாகா மந்திரி எம். எஸ். கன்னம்வார் தலைமை தாங்கியிருக்கிறார்.

கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானம் ஒன்றில், விதர்ப்ப மக்கள் தனி மாநிலம் அமைவதையே விரும்புகின்றனர் என்றும், அவர்களின் விருப்பத்தை கிராம பஞ்சாயத்துகளின் வாக்கெடுப்பு மூலம் தெரிந்துகொள்ளலாம் என்றும், அல்லது காங்கிரஸ் செயற்குழு விரும்புகிற எந்த ஒரு வழியிலும் விதர்ப்ப மக்களின் எண்ணத்தை அறிந்து கொள்ளலாம் என்றும் கூறப்பட்டிருக்கிறதாம்.

உண்ணாவிரதம் மேற்கொண்டார்!

பம்பாய், நவ. 21—

'சம்யுக்த மகாராஷ்டிர பரிஷத்'தின் தலைவரான சங்கர்ராவ் தேவ், நேற்று சௌபாத்தி பொதுக் கூட்டத்தில் நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களுக்காகப் 'பிராயச்சித்தம்' கோருவதற்கென 5 நாட்கள் உண்ணாவிரதம் ஒன்றை, இன்று காலையிலிருந்து ஆரம்பித்திருக்கிறார்.

(சம்பவங்கள் பற்றிய விபரம் 3-ம் பக்கத்தில் வெளியாகியுள்ளது)

வங்கத்தில் மூன்றாவது உருக்குத் தொழிற்சாலை

நான்காவது தொழிற்சாலையும் வடக்கில்தானாம்!

உருக்குத் தொழில் அமைச்சரின் அறிவிப்பு

புதுடில்லி, நவ. 21—

பிரிட்டிஷ் உருக்குத் தொழில் நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இந்தியப் பேரரசால் துவங்கப்பட இருக்கும் மூன்றாவது உருக்கு இரும்புத் தொழிற்சாலை, மேற்கு வங்கத்தில் உள்ள துர்காபூரில் துவங்கப்படும் என உருக்குத் தொழிலமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்துள்ளார்.

அதே நேரத்தில் நான்காவது உருக்குத் தொழிற்சாலை ஒன்றை தாமோதர் அணைக்கட்டு திட்டப் பகுதியில் துவக்கப்படுவதற்காக, அங்கிருக்கும் போக்காரோ பகுதி தகுதியுடையதாக ஆக்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்துள்ளார்.

இந்தியப் பேரரசால் தவங்கப்பட இருக்கும் இம்மூன்றாவது உருக்குத் தொழிற்சாலையில் 3,50,000 டன் மட்டரக இரும்பும், 7,50,000 டன் உயர்ந்த உருக்குப் பொருட்களும் உற்பத்தி செய்யப்படும் எனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இப்பொழுது இருந்து வரும் இரும்புப் பொருள் குறைவை நிறைவு செய்வதற்காக, ஜப்பான், இங்கிலாந்து, அமெரிக்கா மேற்கு ஜெர்மனி, பெல்ஜியம், பிரான்ஸ், சோவியத் ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா முதலிய நாடுகளிலிருந்து தருவிக்கப்பட்டு வருகின்றன.

மைசூர் இரும்பு உருக்குத் தொழிற்சாலையின் உற்பத்திச் சக்தியை, இப்பொழுதுள்ள 30,000 டன்னிலிருந்து 1.00,000 டன் அளவிற்கு உயர்த்துவதற்கான வசதிகளும் செய்ய இந்தியப் பேரரசு எண்ணிக்கொண்டிருப்பதாக அமைச்சர் கூறினர்.

பல்கலைக் கழகப் பேச்சாளர் தேர்வு

தி. மா. மு. க. தோழர் முதல்வர்!

இந்த ஆண்டு சென்னை பல்கலைக் கழகத்தார் நடத்திய பல்கலைக் கழகத் தமிழ் பேச்சுப் போட்டியில், புதுக்கோட்டை கல்லூரி மாணவரும், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத் தோழருமான இரா. நாகராசன், 19-11-55 அன்று, சென்னை மாநிலக் கல்லூரியில், பல்கலைக் கழக முதல் பேச்சாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

'பட்டங்கள் அல்ல!'

சென்னை, நவ. 22—

'பாரத ரத்னம்', 'பத்ம விபூஷண' போன்ற விருதுகள், பட்டங்கள் அல்ல என்றும், எந்தச் சந்தர்ப்பத்திலும் அவ்விருதுகளைப் பெறுவோரின் பெயர்களுக்கு முன்போ, அல்லது பின்போ அவற்றை உபயோகிக்கக் கூடாதென்றும் சென்னை சர்க்கார் அறிவிப்பு மூலம் தெரிவிக்கின்றனர்.

போலீசார் வேலை நிறுத்தம்

இராணுவம் அழைக்கப்பட்டது?

டாக்கா, நவ. 21—

டாக்காவிலும், நாராயண கஞ்சிலும் சில பகுதிகளில் போலீசார் பணியாற்றுவதற்கு மறுத்ததின் விளைவாக, கிழக்கு பாகிஸ்தான் இராணுவத்தினர் போலீசார் பணியினை மேற்கொண்டுள்ளனராம்

அதிகாரிகளின் உத்தரவுக்குக் கீழ்ப்படிய மறுத்த கான்ஸ்டபிள்கள் பலர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், மற்றும் பலர் அவர்களுடைய வீடுகளிலேயே காவலில் வைக்கப்பட்டிருக்கின்றனரென்றும் செய்திகள் கூறுகின்றன.

ராஜாபாக் எனுமிடத்தில், விசேட ஆயுதப் போலீசார், வேலைக்குச் செல்ல மறுத்தனராம்.

குல்னா நகரில் போலீசார் சிலர் கருப்புச் சின்னம் அணிந்துகொண்டு உணவு உட்கொள்ள மறுத்தனரென்றும் கூறப்படுகிறது.

கொலையாளியும், குற்றம் புரிந்த அதிகாரியும்!

கர்நூல்—

"குற்றம் புரிந்த ஒரு அதிகாரியையும், ஒரு கொலைக்காரனையும் என் முன்னே கொண்டுவந்து நிறுத்தினால், நான், முதன்முதலில், குற்றம் புரிந்த அந்த அதிகாரியையே முதலில் சிறைக்கு அனுப்புவேன்,"

என்று, ஆந்திர மாநில முதன்மை நீதிபதி சுப்பாராவ் அவர்கள் கூறியிருக்கிறார்.

சர்க்கார் நீதி நிர்வாகத் துறைகளில் நடைபெறும் ஊழல்கள் குறித்து குறிப்பிடுகையில் இவ்வாறு கூறிய அவர், மேலும் சொன்னார்:—

'இதுபோன்ற நிலைமைகளை இனிமேலும் மேற்பார்வையிடாமல் இருக்கவிடப்போவதில்லை; ஏனெனில், இத்தகுநிலை மேலும் நீடித்துக்கொண்டே போனால், அது, நீதி நிர்வாகத்துறைக்கே பெரும் இழுக்கைத் தேடித் தரும்."

சர்க்கார் துறைகளில் நடைபெறும் ஊழல்களைப் போக்குவதில், அத்துறைகளில் ஈடுபட்டுள்ள அனைவரும் தங்கள் தங்கள் ஒத்துழைப்பை நல்கவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

புஷ்டூன் சபையின் பொதுச்செயலாளர் கைது

எல்லைப்புறக் குற்றச் சட்டப்படி, புஷ்டூன் சகோதரத்துவ சபையின் பொதுச்செயலாளரான கான் முகம்மது ஜபர்கான் என்பவரை, குவெட்டா போலீசார் கைது செய்தனராம். மேற்படி சபையின் தலைவர் சமத்கான் (பலுசிஸ்தான் காந்தி) என்பவர் உட்பட 11 பேர் ஏற்கனவே காவலில் வைக்கப்பட்டுள்ளனர்,

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 22—11—'55 செவ்வாய்

சுகம் தேடு படலம்!

வேலை கிடைப்பதில்லை. தினம் தினம் வேலையற்ரோர் தொகை பெருகிக்கொண்டு வருகிறது.

தொழில்களுக்கு மார்க்கமில்லை. புதிய தொழில்களைத் துவங்கவோ மனமுமில்லை—வகையுமில்லை.

விவசாயத்தில் முற்போக்கு இல்லை. விவசாயத்தையே நம்பிக் கிடக்கும் பெரும்பான்மை மக்களும் அரை வயிறு-கால் வயிறு உண்டே காலம் கழித்து வருகின்றனர்.

அனைவருக்கும் துவக்கக் கல்வி தரப்பட வேண்டும்.

அதற்குரிய வருமானம் இன்மையால் கல்வியின் தரத்தையும் கால அளவையும் குறைக்க முயற்சிக்கப்படுகிறது.

ஆரம்ப ஆசிரியர்கள் பற்ருக்குறையினல் பரிதாபத்திற்குரிய வாழ்க்கை நடத்திவருகிருர்கள். மாதம் ஒன்றுக்கு நான்கோ, ஐந்தோ ரூபாய் ஊதியத்தை கூட்டித் தருமாறு ஆளவந்தார்களிடம் கெஞ்சுகிருர்கள்.

ஆளவந்தார்களோ, 'அது எப்படி சாத்தியமாகும்? ஒரு ரூபாய் கூட்டுவதாக இருந்தாலும் பல இலட்ச ரூபாய் தேவைப்படுமே? அதற்குரிய பணம் அரசாங்கத்திடம் இல்லையே!' என மிக மிக உருக்கமாகக் கூறிக்கொண்டு வருகிருர்கள்.

அரசாங்க ஊழியர்கள் ஊதிய உயர்வு கோரி, மேலும் பல வாழ்க்கை வசதிகள் கோரி நாள் தவருமல் கதறியவண்ணம் இருக்கிருர்கள். ஆனல் ஆட்சியாளர்களோ, 'எது பணம்? எப்படி ஊதியத்தை உயர்த்துவது?' என்று முகாரி பாடியவண்ணம் உள்ளனர்.

ஒவ்வொரு துறையிலும் 'தேவை தேவை' என்ற நியாயமான கூக்குரலைத்தான் மக்கள் எழுப்பியவண்ணமுள்ளனர்.

அவ்வாறு எழுப்பப்பெறும் ஒவ்வொரு கூக்குரலுக்கும், ஆளவந்தார்களும்,சலியாமலும் வெட்கப்படாமலும் 'எது பணம்? இயலவே இயலாது!' என்று கண்டிப்பாகப் பேசியும் வருகிருர்கள். இத்தகு பஞ்சப் பேச்சு பொது மக்களிடத்திலும் சரி, ஆளவந்தார்கள் இடத்திலும் சரி நித்திய நாதமாகிவிட்டது.

தொழில் பெருகவேண்டும்; மக்கள் வாழ்வு பெறவேண்டும்; நாடு முன்னேறவேண்டும். இதனைப் பெற்ருகவேண்டும் என்பதில், மனிதப் பண்புடைய எவருக்கும் கருத்து மாறுபாடு இருக்க நியாயமில்லை.

கல்வி விரிவாதல் வேண்டும்; ஒவ்வொரு இல்லமும் கலைக்கூடமாகத் திகழ வேண்டும்; ஒவ்வொரு குடி மகனும் - மகளும் பேராசிரியர்களாக மாறி முழு மக்களாகக் காட்சியளிக்க வேண்டும்.

இந்நிலையை அடைவதில் நியாய புத்தி படைத்த எவருக்கும் விருப்பம் இருக்கத்தான் இருக்கிறது.

நினைத்தவற்றை அடைய, நல்வாழ்வைத் தேடி அடைய நிலைமை இடமளிக்கவில்லை - அதற்குரிய ஆற்றலும் அதிகாரமும் நமது அரசாங்கத்திடம் அறவே இல்லை.

புதிய தொழில் ஒன்றைத் துவங்க வேண்டுமானல், டெல்லியின் அருளை வேண்டி கால் கடுக்கக் காவடி தூக்கிச் செல்லவேண்டியதாக இருக்கிறது.

டெல்லி எஜமானகவும், சென்னை வெறும் எடுபிடியாகவும் ஆக்கப்பட்டுக் கிடக்கிறது அரசியல் சட்டத்தின் மூலம்.

இந்த அவலட்சண அடிப்படை தகர்த்தெறியப்பட்டாலன்றி நமது தரணி செம்மையடைவதற்கு எதுவே கிடையாது.

இப்பொருந்தா உறவின் உருபலனுகத்தான், நமது மக்களின் மிக மிகச் சாதாரணத் தேவையை, அரைகுறையாக நிரப்பிக் கொள்வதற்குக்கூட நமது ஆட்சியாளர்கள், ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களிடம் கடன் கேட்கவேண்டிய கட்டாயத்தில் இருக்கிருர்கள்.

நமது மக்களின் எதிர்காலத்தை அடகு வைத்துப் பணம் படைத்தவர்களிடம் கடன் பெறுவதற்குக்கூட, டெல்லியின் நல்வாக்கு முன்கூட்டிக் கிடைத்தாக வேண்டும்.

அனுமதி பெற்று, ஆண்டாண்டுதோறும் கடன் எழுப்பாமல் ஆட்சியை நடத்த முடியாது—நமது அரசாங்கத்தின் வரவு-செலவை ஈடுசெய்ய முடியாது என்ற இழி நிலையில் சென்னை அரசாங்கம் வந்திருக்கிறது.

மேலும் சில புது வரிகள் போட்டு அரசாங்கச் செலவை ஈடுசெய்து கொள்ளலாம் என ஆளவந்தார்கள் எண்ணிடத் துணிவார்களேயானல், சோர்ந்துகிடக்கும் மக்களும் துணிவு பெற்றுவிடுவார்கள் அமைச்சர்களைச் சாட!

கடன் எழுப்பும் முறையும் முற்றுப்புள்ளிக் கட்டத்தில் வந்திருக்கிறது; வரி விதிக்கும் போக்கும் முறிந்துவிடும் நிலையைத் தொட்டுவிட்டிருக்கிறது.

ஆட்சியாளர் நிலை இது!

பொது மக்கள் நிலைமையோ மோசம்—படுமோசம்!

குறை—எதிலும் குறை! எவருள்ளத்திலும் குறைபாடு கூத்தாடிக்கொண்டு இருக்கிறது!

தேவைகளினல் தாக்குண்டு தவித்துக் கிடக்கும் மக்கள் ஒரு பக்கத்தில் — அத்தேவைகளைக் குறைந்த அளவிலாவது பூர்த்தி செய்ய வகை அறியாது ஆந்தைபோல் விழித்துக் கொண்டு திகைத்துக் கிடக்கும் ஆட்சியாளர்கள் ஒரு பக்கத்தில்!

இத்தகுக் கொடுந்துன்பக் கட்டத்தில் துக்கமும், வெட்கமும் படவேண்டிய காங்கிரஸ் அமைச்சர்களுக்கு, கோலாகலத்திலே, சொந்தத்தில் சுகம் தேடுவதிலேயே நாட்டம் செல்லுகிறது என்ருல், இந்த அமைச்சர்களின் மனப்பாங்கை என்ன என்பது?

கோடை வெப்பத்தைத் தவிர்க்க வகைதேடும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்கள் காங்கிரஸ் ஆளவந்தார்கள்!

நீலமலையில் மூன்று திங்களும், குற்ருலத்தில் மூன்று திங்களும் ஆக ஆறு திங்கள் வரை, சட்டசபையை, மேற்குறிப்பிட்ட இரு இடங்களிலும் கூட்டப்போகிருர்களாம்!

சென்னையில் கோடை வெப்பம் தாங்க முடியாததாம்! எனவே, நீல மலைக்கும், குற்ருலத்திற்கும் அக் காலத்தில் சட்டசபையைக் கடத்திச் செல்ல சிந்திக்கிருர்களாம் காங்கிரஸ் ஆளவந்தார்கள்!

கோடையின் கொடுமை தாங்காத் திருமேனிகள் அல்லவா இந்தக் காங்கிரஸ் அமைச்சர்களும், அவர் வழி நிற்கும் உறுப்பினர்களும்!

ஏகாதிபத்திய ஆட்சியில் எஜமானர்களாக இங்கு வந்திருந்த ஆங்கில அதிகாரிகளும் நினைக்கவே அஞ்சிய ஒரு ஏற்பாட்டை நமது காங்கிரஸ் ஆளவந்தார்கள் எண்ணத் துணிந்துவிட்டார்கள்—எண்ணிய வண்ணம் எவ்வாறு செயலாற்றுவது எனக் கருதவும் துணிந்துவிட்டார்கள்!

விவசாயி, வறுமையில் வதைகிருன்! ஆசிரியன் அல்லல் பட்டுக் கிடக்கிருன்! தொழிலாளி துன்புறுகிறுன்! படித்துப் பட்டம் பெற்றவன், வேலையின்றித் திண்டாடுபவன், அரசாங்க ஊழியன், ஏனையோர் அனைவரும் கண்களைக் கசக்கியவண்ணம் காலங் கழித்து வருகின்றனர்!

மக்களில் பெரும்பான்மையினர் வாழ்க்கை, ஒரு சுமையாக மட்டுமேயில்லாது தாங்கொணுத வெப்பமாகவும், இருந்துவருகிறது, இந்த நல்லவர்கள் ஆட்சியில். இக்கடும் வெப்பத்தைக் குறைக்க, ஆசையோ அக்கரையோ கடுகளவு இருப்பதாகவும் காட்டிக்கொள்ள இந்த அமைச்சர்களுக்கு இதுவரை நல்லறிவு பிறக்கவில்லை. ஆனல், பகலவனின் வெப்பத்திலிருந்துத் தங்களை மட்டுமே காப்பாற்றிக்கொள்ள அமைச்சர்கள் எண்ணுகிருர்கள்!

பொதுமக்கள் துன்புறுகிருர்கள்! ஆனல் ஆளவந்தார்களோ இன்பம் இருக்கும் இடம் தேடுகிருர்கள்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்திய எஜமானர்களைப் போல, காங்கிரஸ் அமைச்சர்களும் எந்தக் குளிர் நாட்டிலிருந்து இங்குக் குடியேறினர்களோ, நாம் அறியோம்!

கோடையின் கொடுமை தாங்க முடியாது இன்ன அமைச்சரின் மூளை உருகிவிட்டது—இன்ன அமைச்சர் வெப்ப நோய்க்குப் பலியானர்—இன்ன அமைச்சர் வாழ்நாள் முழுதும் பிணியாளரானர் என எவரும்—எப்பொழுதும் இதுவரை கேள்விப்பட்டது கிடையாது. ஆனல், பொதுமக்கள் பணத்தில் உல்லாசமாகக் கோடையைக் கழிக்க காங்கிரஸ் அமைச்சர்களின் உள்ளம் நீலமலைக்கும் குற்ருலத்திற்கும் தாவப் பார்க்கிறது!

சட்ட சபையில் அமைச்சர்களின் சுகம் தேடு படலம் நடைபெறத்தான் போகிறது. அதுகாலை எதிர்க் கட்சி உறுப்பினர்கள், ஏழை மக்களின் மனப்போக்கை எதிரொலிக்கத்தான் போகிருர்கள்.

அமைச்சர்களின் பேராசையையும், ஊதாரித்தனத்தையும் பொதுமக்கள் புரிந்துகொள்ளும்படி, எதிர்க் கட்சி உறுப்பினர்கள் வகை செய்தாக வேண்டும்.

அரசியல் கிளர்ச்சிகளில் மாணவர்கள் ஈடுபடுவதேன்?

அண்ணுதுரை விளக்கம்

"இன்றுள்ள நிலைமையில், எல்லா அரசியல் கட்சியினரும், மாணவர்கள் அரசியலில் ஈடுபடலாமா—கூடாதா என்பதையே ஒரு பிரச்சினையாகக் கொண்டிருக்கின்றனர்; ஆனல், அது அல்ல இப்போது இருக்கும் பிரச்சினை.

"நல்ல மாளிகை ஒன்று; அதற்கு நாற்புறமும் நல்ல ஜன்னல்கள்; வெளியிலிருந்து அடிக்கும் காற்று வேகமாக இருந்தால் ஜன்னலை மூடுவார்கள்; வெளியிலிருந்து காற்று இல்லை என்ருல் ஜன்னலைத் திறப்பார்கள். ஒரு மாளிகையினுள் இருப்பவர்களைப் போன்றவர்கள்தான் மாணவர்களும். வெளியே அடிக்கிற காற்று பெருங் காற்ருக இருந்தால், மாணவர்கள் ஜன்னலை மூடிவிடத்தான் வேண்டும்; மாளிகையில் காற்றில்லாமல் ஒரே புழுக்கமாக இருந்தால் ஜன்னலைத் திறந்துதான் ஆக வேண்டும். அதுபோலவேதான் அரசியலிலும்; அரசியல் நிலைமைகளை மாணவர்கள் தெரிந்துகொள்ளவேண்டுவதுதானே தவிர, அரசியலை நடத்திச் செல்லும் பொறுப்பு அரசியல் வாதிகளுக்குத்தானே தவிர,—மாணவர்களுக்கல்ல

"கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் அவர்கள் பயிலுங்காலை, அரசியல் கிளர்ச்சிகளில் அவர்கள் ஈடுபடத் தேவையில்லை. அப்படி அவர்கள் கிளர்ச்சிக்காரர்களாக வேண்டுமென்ருல், கல்லூரிக்கு வெளியே கட்டணமில்லாமலேயே ஆகிக்கொள்ளலாமே? கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் அரசியல் கிளர்ச்சிகளில் ஈடுபடுகின்ருர்கள் என்ருல்—கிளர்ச்சிக்கும் அவர்களுக்கும் தொடர்பு இருக்கிறதென்ருல், 'மாணவர்களும் கிளர்ச்சிகளில் ஈடுபடக் கூடிய அளவிற்கு அரசியல் சூழ்நிலைகள் இருக்கின்றது' என்பதுதான் பொருள். அத்தகைய ஒரு அரசியல் சூழ்நிலை உருவாகக் கூடாது என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கமாகும்.

"மாணவர்கள் அரசியல் நடவடிக்கைகள் பற்றி நன்ருக அறிந்திருக்கவேண்டும்; அரசியல் வாதிகளுக்குக் கற்றுக் கொடுக்கப்படுகிற அளவுக்கு மாணவர்களுக்கும் அரசியல் அறிவு கற்றுக் கொடுக்கப்படவேண்டும். மக்களுக்கு அரசியல் நடவடிக்கைகளை எடுத்துக் கூறுபவர்கள் அரசியல் வாதிகள். அரசியல் நடவடிக்கைகளில் பல அதிகாரப் போட்டிப் பூசல்கள் ஏற்படும். ஆனல் அந்த நேரங்களிலெல்லாம் மாணவர்கள் தங்கள் கல்வியின் அருமை பெருமைகளை உணர்ந்து நடந்துகொள்ளவேண்டும்.

"கோவா விடுதலைப் போராட்டத்தில் மாணவன் ஒருவன் சுடப்பட்டு கொலையுண்டான் என்று ஒரு செய்தியை மற்ருெரு மாணவன் படித்தால் அவனுடைய உண்மை மனநிலை எப்படி இருக்கும்? இந்தச் செய்தியைப் படிக்கும் மாணவர் உள்ளத்தினின்றும் உணர்ச்சிப் பொங்கி வழியத்தான் செய்யும். என்ருலும், வாலிபர்கள், சாந்தியுடனும், சமாதானத்துடனும், மக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் ஆட்சிப் பொறுப்பைக் கொள்ளவேண்டும்."

—இவ்வாறு, 19—11—55-ல் சென்னையில் நடைபெற்ற திராவிட மாணவர் முன்னேற்றக் கழக 2-வது மாநில மாநாட்டில் பேசுகையில் அண்ணு அவர்கள் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது:—

திராவிட முன்னேற்றக் கழக மாணவர்கள், எதிர்காலத்தில் இந்த மாநிலத்திற்குத் தேவையான ஆக்க வேலைக்கான திட்டங்களைத் தீட்டித்தரவும் கட்டுப்பாடாக நின்று பணியாற்றவும் இந்த மாநாடு நடைபெறுவது கண்டு நான் மகிழ்கிறேன்: மாணவர் முகங்களிலே காணப்படும் உற்சாகத்தைக் கண்டு நானும் பெருமகிழ்வடைகிறேன்; பெரிய மைதானங்களில் நடைபெறவேண்டிய இந்த மாநாடு இந்தக் கட்டிடத்திற்குள் நடைபெறுவது அவர்களுக்குப் பிரியமில்லை என்பதையும் நான் உணருகிறேன்; அவர்களிடத்திலே குடிபுகுந்திருக்கிற ஆவலையும், அவர்கள் வெளிக்காட்டுகிற திறமையையும் கண்டு பூரிப்புகொள்கிறேன்; எனினும், அண்மையிலேயே பெரியதொரு மாநில மாநாடு நடைபெற இருக்கிறது என்பதாலும், அந்த மாநாட்டிற்கான நல்ல பல திட்டங்களை, கூடிக்கலந்து பேச இதுவே போதும் என்பதாலும்தான், இந்த மாநாடு இந்தக் கட்டிடத்திற்குள் நடைபெறுகிறது. அது மட்டுமல்ல; இந்த மாநாடு மாணவர்கள் தங்கள் உணர்ச்சியைக் கொட்டிக் காட்டி, உற்சாகத்தைப் பேசிக் காட்டுவதற்கு என்று நடைபெறுவதல்ல; மாருக, யார் யார் எந்தெந்தக் காரியங்களை எப்படி எப்படி நடத்தவேண்டுமென்பதைக் காட்டுவதற்காகத்தான் நடைபெறுகிறது.

"நான் பல கல்லூரிகளுக்கும் செல்லுகிறேன்—பள்ளிகளுக்கும் செல்லுகிறேன்; அங்கு செல்லுகிறபோதெல்லாம் அங்குள்ள மாணவர்களைக் காண்கிறேன், அந்த மாணவர்கள் பெற்றுள்ள அறிவையும், திறனையும் பார்த்துப் பூரிப்படைகிறேன். தேவையான அறிவையும், வேண்டிய திறமையையும் பெற்றுள்ள அம்மாணவர்களனைவரும் ஒன்று திரண்டு நாட்டுக்கு நல்ல பணியாற்றுவதில் முன்வர வேண்டும்.

"திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோள், இயக்கம் வெற்றிபெற அதில் சேரும் அத்தனைபேரும் தங்கள் தங்கள் தனித் தன்மையை விட்டுவிட வேண்டுமென்பதல்ல; கலைஞரும், கவிஞரும், ஓவியரும், சிற்பிகளும் இவர்களைப் போன்ற பல துறையினரும் திராவிடம் விடுபட வேண்டுமென்று ஆசைப்பட்டால் நிச்சயம் வெகுவிரைவிலேயே பிரிந்தே தீரும்.

"நடிப்புத்துறையிலே ஈடுபட்டிருப்போர் நடிக்கத்தான் வேண்டும்; ஆனல், சிறப்பாக நடிக்க வேண்டும்.

"ஓவியத்துறையில் ஈடுபட்டிருப்போர் ஓவியந் தீட்டத்தான் வேண்டும்; கண்ணன்களையும், காமுகர்களையும் அல்ல—தாளமுத்துக்களையும், நடராசன்களையும் ஓவியமாகத் தீட்டவேண்டும்.

"மாணவர்கள் படிக்கத்தான் வேண்டும்; படிக்கும்போது வரிக்கு வரி கவனமாகப் படித்து அடையிலுள்ள உண்மைகளைக் கண்டறிந்து நமக்குத் தெரிவிக்க வேண்டும்.

"ஆசிரியர்கள்—கற்பிக்கத்தான் வேண்டும்—நல்ல முறையிலே!

"இப்படியேதான் ஒவ்வொருவரும், தான் தான் இருக்கிற இடத்தில இருந்துகொண்டே நாட்டுக்கு—திராவிடத்துக்குத் தேவையானது என்று கருதப்பட்டதைச் செய்ய வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

தி. மு. கழக மாநில மாநாட்டிற்கு பச்சையப்பன் கல்லூரி மாணவர் ரூ. 400 பண முடிப்பு அளித்தனர்

தி. மா. மு. கழக மாநாட்டு நிகழ்ச்சி விவரம்

சென்னை, நவ. 20—

திராவிட மாணவர் முன்னேற்றக் கழக மாநில மாநாடு சென்னை கோகலே மண்டபத்தில் நேற்று காலை 8-30 மணி முதல் 1 மணி வரை தோழர் கே. ஏ. மதியழகன் தலைமையில் நடைபெற்றது.

தி. மு. கழகப் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் மாநாட்டைத் திறந்துவைத்தார்.

தோழர் டி. கே. பொன்னுவேலு வரவேற்புரை நிகழ்த்தினுர்.

தோழர்கள் சி. என். அண்ணுதுரை, என். வி. நடராசன் ஆகியோர் சிறப்புரை ஆற்றினர்.

1500 மாணவர்களுக்கு மேல் நாட்டின் பல்வேறு பாகங்களிலிருந்து கலந்துகொண்டனர்.

அண்ணுமலை பல்கலைக் கழகம், மதுரை, புதுக்கோட்டை, பாண்டிச்சேரி, கடலூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகங்களும் பிரதிநிதிகளை அனுப்பி வைத்திருந்தன.

மாநாட்டிற்கு வாழ்த்துத் தெரிவித்து தோழர்கள் காஞ்சி-கல்யாணசுந்தரம், ஈ. வெ. கி. சம்பத், எம். பி. சுப்பிரமணியம் எம் எல் ஏ., கிருஷ்ணமூர்த்தி, கோவை-செழியன், சி டி. தண்டபாணி, சி பி. சிற்றரசு, எம். எஸ். மணி, பச்சையப்பன் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், திருவனந்தபுரம் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம், இரயில்வே தொழிலாளர்கள் (பெரம்பூர்) ஆகியோரிடமிருந்து கடிதங்களும், தந்திகளும் செயலாளர் பில்லப்பனுல் படிக்கப்பட்டது.

மாநாட்டில், பச்சையப்பன் கல்லூரி திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் சார்பில், திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக மாநில மாநாட்டிற்காக ரூ. 400 கொண்ட பண முடிப்பு, பொருளாளர் தோழர் கே. ஏ. கிருஷ்ணசாமியால் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் கொடுக்கப்பட்டது.

மாநாட்டுத் தலைவர் மதியழகன் பச்சையப்பன் கல்லூரி மாணவர்களின் முயற்சியைப் பாராட்டிவிட்டு, மற்ற கல்லூரிகளும் பச்சையப்பன் கல்லூரியை முன் மாதிரியாகக்கொண்டு தி. மு. கழக மாநில மாநாட்டு நிதிக்கு உதவ வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்

மாநாட்டு மேடை பல வண்ணச் செடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மண்டபம் அமைந்துள்ள தெரு, உயர்நீதிமன்றம் துவங்கி கொடிகளாலும், தோரணங்களாலும், தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

மாநாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டிற்கு மாணவப் பிரதிநிதிகளன்றி, பார்வையாளர்களாக தோழர்கள் டி. சண்முகம் எம்.எல். ஏ., கே கே. நீலமேகம், நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் இரா. செழியன், தில்லை-வில்லாளன், இராம. அரங்கண்ணல், கா. அப்பாதுரை, சென்னை மாவட்டச் செயலாளர் இளம்பரிதி, துணைச் செயலாளர் செங்குட்டுவன், பொருளாளர் சுந்தரமூர்த்தி, முன்னுள் செயலாளர் கே எம். கண்ணபிரான், சுரதா, நகர சபை உறுப்பினர்கள் வி. முனுசாமி, அ. பொ. அரசு, தோழியர் அலமேலு அப்பாதுரை, தோழர் டி. எம் பார்த்தசாரதி, எஸ். எஸ். பி. லிங்கம், சி. வி. இராசகோபால், எஸ். முத்து ஆகியோரும் வந்திருந்து சிறப்பித்தனர்.

மாநாட்டு ஆரம்பத்தில் இசைச் செல்வி ஜி. கஸ்தூரியின் இன்னிசை விருந்து நடைபெற்றது.

மாநாட்டு நிகழ்ச்சிகள் தோழர் எஸ் எஸ். பி. லிங்கம் அவர்களால் ஒலிப்பதிவு செய்யப்பட்டது.

மாநாட்டுச் செயலாளர் உ. பில்லப்பனுல் நன்றிகூறப்பட்டு மாநாடு இனிது முடிவுற்றது.

மாநாட்டுப் பணிகளில் கடந்த 4, 5 நாட்களும் உடனிருந்து ஒத்துழைத்துப்பணியாற்றிய சென்னை மாவட்ட தி. மு. கழகத் துணைச் செயலாளர் தோழர் செங்குட்டுவனின் பணி பாராட்டத் தக்கது.

மேடை அலங்காரம், தோரண அமைப்பு ஆகியவைகளில் சென்னை நகர சபை உறுப்பினர் வி. முனுசாமி பேருதவி புரிந்தார்.

★

தீர்மானங்கள்

அனுதாபம்

(1) திருச்சி ஜோசப் கல்லூரியின் பேராசிரியரும், திராவிட இயக்க நண்பருமான திரு. இருதயராஜ் அவர்களின் திடீர் மறைவு குறித்து இம்மாநாடு அன்னுர் குடும்பத்தாருக்குத் தன் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறது.

—தலைவர்

இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு

(2) இந்தியப் பேரரசு இந்தி மொழியைத் தேசிய மொழி என்ற பெயரில் இதர மொழி பேசும் மக்களின்மேல் கட்டாயமாகத் திணித்து, அம்மக்களின் கலை — மொழி—கலாச்சாரம் முதலியவைகளை நசுக்குவதால், இதுவே அம்மக்களின் அரசியல் அடிமைத்தனத்திற்கு அடிப்படையாக அமைகிறது—என்று இம்மாநாடு கருதுவதால், இந்தியப் பேரரசு இந்தியைக் கட்டாயமாகவோ, அன்றி வேறு எந்த முறையிலும் திணிப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது

முன் மொழிந்தவர் :- தோழியர் பொ. சற்குணம், தாமஸ் பெண்கள் உயர்நிலைப் பள்ளி, இராயபுரம்.

வழிமொழிந்தோர் :- டி. தயாளன், நுங்கம்பாக்கம் உயர்நிலைப் பள்ளி ; மதிவாணன், அர்ச் பீட்டர்ஸ் உயர்நிலைப் பள்ளி ; முத்துசாமி, அண்ணுமலை பல்கலைக் கழகம்.

நாட்டு விடுதலைக்கு ஒத்துழைப்பு

(3) வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் பிடிப்பிலிருந்து திராவிட நாடு விடுதலை அடையவேண்டுமென்ற உயர்ந்த இலட்சியத்திற்கு என்றும் திராவிட மாணவர்கள் துணை நிற்பார்கள் என்று இம்மாநாடு உறுதி கூறுகிறது.

முன் மொழிந்தவர் :- கே. ஏ. கிருஷ்ணசாமி, பச்சையப்பன் கல்லூரி.

வழிமொழிந்தோர் :- தமிழரங்கன், புதுவை; மெய்யன்பன், —லயோலாக் கல்லூரி ; பி சுப்பையா - (ஆங்கிலத்தில்) சட்டக் கல்லூரி ; டி. கே இராஜபாதர், பச்சையப்பன் கல்லூரி.

சீரமைப்புக் குழுவின் பெரும் அநீதி

(4) மாநிலப் புனரமைப்புக் குழு தமிழகத்திற்குரிய தேவிகுளம், பீர்மேடு, சித்தூர், செய்யாற்றங்கரை பகுதிகளைத் திருவிதாங்கூர் கொச்சி மாநிலத்தில் சேர்க்க முடிவு தெரிவிப்பது, தமிழகத்திற்குச் செய்யும் பெரும் அநீதி என்று இம்மாநாடு கருதுவதால், மேற்கண்ட முடிவை மாற்றி, பீர்மேடு, தேவிகுளம், சித்தூர், செய்யாற்றங்கரை பகுதிகளைத் தமிழகத்தோடு சேர்க்கும்படி இந்தியப் பேரரசை இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது. திருத்தி அமைக்கப்படும் அமைப்பில் சென்னை மாநிலம் என்றில்லாமல் 'தமிழ் நாடு' அல்லது 'தமிழகம்' என்று அழைக்கப்பட வேண்டும் என்பதை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

முன் மொழிந்தவர் :— சு. ஆறுமுகம், பச்சையப்பன் கல்லூரி.

வழிமொழிந்தோர் :-உ. பில்லப்பன், க. அறிவழகன்—பச்சையப்பன் கல்லூரி.

கல்லூரிகளில் தமிழ் மொழி

(5) சென்னை, அண்ணுமலை பல்கலைக் கழகக் கல்லூரிகளில், எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழியே கற்பிக்கும் மொழியாக அமைதல் வேண்டும் என்று இம்மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

முன் மொழிந்தவர் :- எஸ். அமீது, பச்சையப்பன் கல்லூரி

வழி மொழிந்தோர் :- டி. நடராசன், பச்சையப்பன் கல்லூரி ; லெனின், லயோலாக் கல்லூரி.

தெலிங்கானு பிரச்சினையில் தீர்ப்பு?

ஆந்திர மாநிலத்துடன் இணைக்கப்படும்

புதுடில்லி நவ 20—

புதிய மாநிலங்கள் அமைக்கப்படும்போது, தெலிங்கானு பிரதேசமும் ஆந்திராவுடன் இணைக்கப்படுவதுதான் விரும்பத்தக்கது என்று தாங்கள் கருதுவதாகக் காங்கிரஸ் தலைமையினர், தெலிங்கானு தலைவர்களிடம் முடிவாகக் கூறிவிட்டதாகத் தெரிகிறதாம்.

கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள் புதிய நடவடிக்கை?

மலேயா கிராமங்களில் புகுந்து கொலையும் — கொள்ளையும் நடத்தினராம் !

கோலாலம்பூர், நவ. 20—

மலேயா முக்கூட்டுக் கட்சித் தலைவரான சர். ஜான் மார்ஷல் புது மந்திரிசபை அமைத்த கடந்த 2, 3 திங்களுக்குப் பின்னர், இப்போது மீண்டும் மலேயாவில் கம்யூனிஸ்டுப் பயங்கரவாதிகள் எனப்படுவோரின் அட்டகாசம் வலுத்து வருகிறது.

கம்யூனிஸ்டு பயங்கரவாதிகள் என்றழைக்கப்படும் சுமார் 100 பேர் ஒன்று திரண்டு, இன்று அதிகாலை காமரன் ஹைலண்ட்ஸ் நகர்புறத்திற்கு வடக்கே சுமார் 5 கல் தொலைவுக்கு அப்பாலுள்ள புதிய கிராமம் ஒன்றில் புகுந்துகொண்டு கொலை பாதகச் செயல்களில் ஈடுபட்டிருக்கின்றனர். அந்தக் கிராமத்தில் உள்ள ஒரு காவலாளியைக் கொன்றதுடன் மட்டுமல்லாமல், மற்றொரு போலீஸ்காரரையும் கொன்றுவிட்டிருக்கின்றனர் என்று செய்திக் குறிப்புக் கூறுகிறது.

இருவரைக் கொலை செய்துவிட்டு, அந்தக் கூட்டத்தினர், கிராமத்தினுள் புகுந்து 35 ஆயுதங்களைத் திருடிச் சென்றிருக்கின்றனர்.

முதன் முதலில் அக்கூட்டத்தவர், அந்தக் கிராமத்தைச் சுற்றிலுமுள்ள தந்திக் கம்பிகளை எல்லாம் அறுத்தெறிந்து விட்டனராம். தொடர்புகள் துண்டிக்கப்பட்ட பின்னர் அவர்கள், கிராமக் காவலாளிகள் தலைவனை நெருங்கி, தங்களெல்லோரையும் ஒவ்வொரு வீட்டிற்கும் அழைத்துச் செல்லுமாறு பயமுறுத்தியுள்ளனர்; அவ்வாறு சென்றபோதுதான், வீடுகளிலிருந்து 35 ஆயுதங்களைத் திருடியிருக்கின்றனர்.

வீடுகளில் சோதனைகள் முடிவுற்ற பின்னர், கிராமத்திலுள்ள கடைகள் அனைத்திலும் புகுந்து அங்குள்ள உணவுகளையெல்லாம் சூறையாடியிருக்கின்றனர்.

இந்தக் கொடுஞ் செயல்களையெல்லாம் முடித்துக்கொண்ட பயங்கரவாதிகள், இறுதியாகப் போலீஸ் நிலையத்தைச் சுற்றி வளைத்து நின்றுகொண்டு, போலீசாரையும் சரணடைந்து அடையுமாறு கேட்டுக் கொண்டிருக்கின்றனர். என்றும் செய்திகள் அறிவிக்கின்றன.

பம்பாய் முதலமைச்சர் பேசிய கூட்டத்தில் கல்வீச்சு!

சம்யுக்த மராட்டியக் கோரிக்கையாளரின் ஆர்ப்பாட்டமாம் !

பம்பாய், நவ. 20—

மாநில புனரமைப்புக் குழுவின் அறிக்கை குறித்து பம்பாய் பிரதேசக் காங்கிரஸ் குழு மேற்கொண்ட முடிவுகளை பொதுமக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கென இங்கு நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டம் ஒன்றில், அந்தக் கூட்டத்தைக் கலைத்துவிட வேண்டுமென்ற எண்ணத்துடன் நூற்றுக்கு மேற்பட்ட சம்யுக்த மகாராஷ்டிரம் கோருவோர், கூட்டத்தினர் மீது கற்களையும், பழைய செருப்புக்களையும், உடைந்த நாற்காலிகளையும் தூக்கி எறிந்தனர் என்று பத்திரிகைகள் அறிவிக்கின்றன.

கூட்டத்தில் கலந்துகொண்ட பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜி தேசாய் மீதும் கல் வீசப்பட்டதாகவும், வீசப்பட்ட கல் அவர் மண்டையில் பட்டும் கூட, நல்லவேளையாக அந்தக் கல் அதிகக் கூர்மையுடையதாக இல்லாமல் மழுங்கிப்போன ஒன்ருக இருந்தமையால் அதிகமான காயம் ஏதும் ஏற்படவில்லையென்றும், செய்தி தந்துள்ள பத்திரிகைகள் கூறுகின்றன.

எப்படியும் இந்தக் குழப்பத்தின்போது நூற்றுக்கு மேற்பட்ட நாற்காலிகளெல்லாம் உடைக்கப்பட்டோ, தீயிடப்பட்டோ நாசமாக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

குழப்பத்தின் விளைவாக, பெண்களும், குழந்தைகளும் உட்பட 50 பேர், கல்லெறிகளின் காரணமாக காயப்பட்டு சிகிச்சை பெறுவதாயும், 20 பேருக்கு மேற்பட்டவர்கள் அபாயகரமான நிலையில் இருப்பதாயும் கூறப்பட்டிருக்கிறது.

இக்குழப்பங்களையொட்டி 200 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

'பனம்பள்ளி நம்பிக்கை துரோகம் இழைக்கிருர்'

திரு-தமிழகக் காங்கிரஸ் குற்றச்சாட்டு

திருவனந்தபுரம், நவ. 21—

திருவாங்கூர் தமிழர்களைப் பொறுத்தமட்டில், பனம்பள்ளி சர்க்கார் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக திரு-தமிழகக் காங்கிரஸ் செயற்குழு கருத்தறிவித்திருக்கிறது.

அடுத்து நடைபெறவிருக்கும் சட்டசபைக் கூட்டத்தின்போது மாநிலக் குழுவின் சிபாரிசு குறித்து தீர்மானம் சர்க்காரால் கொண்டு வரப்படும்போது, அதற்கு 'திருவாங்கூரில் உள்ள ஒன்பது தமிழ் வட்டங்களையும் தமிழகத்துடன் இணைக்க வேண்டும்' என்று ஒரு திருத்தம் கொண்டுவருவது என்றும் செயற்குழு முடிவு செய்திருக்கிறதாம்.

சட்டசபையில் தி. த. நா. காங்கிரசைச் சேர்ந்த 12 பேர்களும் இத்திருத்தத்தைக் கொண்டுவருவது என்றும், அடுத்தாற்போல, காங்கிரஸ் உயர்தரக் குழுவைச் சந்தித்து தங்கள் கோரிக்கையை எடுத்துரைப்பது என்றும் குழு முடிவு செய்திருக்கிறதாம்.

இப்போதுள்ள திரு-கொச்சி சர்க்காரிடமிருந்து தமிழர்கள் நியாயத்தை எதிர்பார்க்க முடியாது என்றும் கட்சித் தலைவர் நேசமணி குறிப்பிட்டிருக்கிருர்.

கடந்த 1955 பிப்ரவரி 9-ந் தேதியன்று, காங்கிரஸ், மந்திரி சபை அமைக்க தி. த. நா. காங்கிரசின் ஆதரவைக் கோரியபோது பனம்பள்ளி கோவிந்தமேனன், 'திரு-கொச்சி தமிழ் பகுதிகள் சென்னையுடன் சேரவேண்டும்' என்ற தங்களின் கோரிக்கைக்கு, தாங்கள் காங்கிரசுக்கு ஆதரவு தரும் செயல் முட்டுக்கட்டையாயிருக்காது என்று உறுதிமொழி தந்தார் என்றும், ஆனல் இப்போது, அதை மீறி அவர் பேசுவதாயும் திரு-தமிழக காங்கிரசார் குறைப்பட்டுக் கொள்கின்றனராம்.

காங்கிரஸ் மேலிடத்தவரிடம் தர, அவர்கள் அறிக்கை ஒன்றும் தயாரித்துவிட்டனர்.

* *

தலைமைக் கழகச் செய்தி

வெளிநாட்டுத் தோழர்கள் கவனிக்க

திராவிட முன்னேற்றக் கழகத்திடத்து நீங்காப் பற்றும், தணியா அன்பும், குறையா ஆர்வமும் கொண்டு வடநாடு—இலங்கை—பர்மா—மலேயா ஆகிய பகுதிகளில் வாழும் தோழர்கள் மாநில மாநாட்டுக்கான நிதியைப் பெருமளவில் பெருமுயற்சியோடு சேர்த்து உடனடியாகத் தலைமைக் கழகத்துக்கு அனுப்பி வைக்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள். பிற வெளி நாடுகளில் உள்ள தோழர்களும் இம்முயற்சியில் இறங்கும்படி வேண்டிக்கொள்ளப்படுகிருர்கள்.

வடநாடு—இலங்கை—பர்மா—மலேயா ஆகிய இடங்களிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகள் நிதி திரட்டுவதற்கு ஆவனவெல்லாம் செய்யும்படி வேண்டிக் கேட்டுக்கொள்ளப்படுகிருர்கள்.

நிதி அனுப்ப வேண்டிய முகவரி :

பொதுச்செயலாளர், தலைமைக் கழகம்,
'அறிவகம்', இராயபுரம், சென்னை-13

'அறிவகம்'
14-11-55.

—தி. மு. க. தலைமை நிலையம்

* *

காங்கிரஸ் அகிம்சை......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

றவை எல்லாம், கல்வீச்சுக்களால் சுக்கு நூறாகத் தகர்த்தெறியப்பட்டனவாம்!

கோர உருவமெடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் இத்தனையும் செய்து கொண்டிருக்கையில், பம்பாய் மாநில முதலமைச்சர் சட்ட (மேல்) சபைக் கூட்டத்தில், பம்பாய் குறித்த மாநிலக் குழு அறிக்கை குறித்து வெகு மும்முரமாக விவாதித்துக் கொண்டிருந்தாராம்.

துப்பாக்கிப் பிரயோகங்களின் விளைவாக 56 பேர்கள் துப்பாக்கிக் குண்டுக் காயம் பட்டிருப்பதாயும், காயம்பட்ட மற்றோர், தடியடிகளாலும், கல்வீச்சுக்களாலும் காயமுற்றிருக்கின்றனர் என்றும், காயமுற்றோரில் 11 பேர் போலீஸ் அதிகாரிகள் என்றும், ஒன்பது பேர் போலீஸ் கான்ஸ்டபிள்கள் என்றும், 23 பேர் நகர காவலர்கள் என்றும், படுமோசமான நிலையில் இருக்கும் போலீஸ் அதிகாரி ஒருவர் சிகிச்சைக்காக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார் என்றும் போலீசார் தெரிவித்திருக்கின்றனர்.

இன்று ஒரு நாள் முழுவதும் 155 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் போலீசார் அறிவித்துள்ளனர்.

சட்ட (மேல்) சபையை நோக்கி, தாக்குதல் நடத்துவது என்ற எண்ணத்துடன் ஆவேசமாகத் திரண்டு கொண்டிருந்த சுமார் 6,000 பேரடங்கிய கூட்டத்தின் மீது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் 4 பேர் கொல்லப்பட்டனராம்.

இவ்வளவு ஆர்ப்பாட்டங்களுக்கும் காரணம், சர்க்கார் இடதுசாரிக் கட்சியினரும், தொழிற்சங்கங்களும், 'பம்பாய் நகரைத் தனி மாநிலமாக்கவேண்டும்' என்ற கருத்துக்குத் தங்களது கண்டனத்தையும், எதிர்ப்பையும் தெரிவித்துக் கொள்வதற்காக மேற்கொண்ட வேலை நிறுத்தம்தான் என்று கூறப்படுகிறது.

முதன் முதலில் ஆர்ப்பாட்ட, கிளர்ச்சிகள் அனைத்தும் வடபம்பாயிலேயே கிளம்பின என்றும்; அங்குள்ள ஆலைகளில், காலை வேலைகளுக்கு வந்த தொழிலாளர்கள் அனைவரும், ஆலைக்குள் செல்லாமல் வெளியே திரண்டனர் என்றும், அதனையொட்டி ஆலைகள் மூடப்பட்டன என்றும் தெரிகிறது. வட பம்பாயிலுள்ள பெரும்பான்மையான பள்ளிகளும், கல்லூரிகளும் மூடப்பட்டுவிட்டனவாம்!

கத்தி போன்ற ஆயுதங்களைத் தாங்கிய கூட்டத்தினர், வட பகுதியிலுள்ள தொழில்துறை இடங்களுக்குச் சென்று அங்குள்ள கடைகள், தொழில் நிறுவனங்கள் ஆகியவற்றை பலவந்தப்படுத்தி மூடியிருக்கின்றனர்

அவர்கள், தங்களது பெரும் பகுதி கவனத்தையும் போலீஸ் பாதுகாவலுடன் நடைபெற்றுக் கொண்டிருந்த பஸ், டிராம் போக்குவரத்துக்களில் செலுத்த ஆரம்பித்தனராம். உடனே அப்பகுதிகளில் ஓடிக்கொண்டிருந்த பஸ்கள்; டிராம்கள் மீது கல் வீசினராம். ஓடிக்கொண்டிருந்த இரண்டு பஸ்களை நிறுத்தி, அவற்றில் ஏறிச்சென்ற பிரயாணிகளையும், பஸ் டிரைவர்களையும், கண்டக்டர்களையும் பலவந்தமாகக் கீழே இறங்கச் செய்து, அவை இரண்டையும், அவர்கள் கண் முன்னேயே தீயிட்டுக்கொளுத்தினராம்!

அதே நேரத்தில், நகரின் பல இடங்களிலும் கல் வீச்சுக்கள் நடைபெற்றதாயும், அன்று முழு நாளும், போலீசார், ஒரு இடம் விட்டு ஒரு இடமாகத் தொடர்ந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் கூறப்படுகிறது.

இத்தகைய கடும் ஆர்ப்பாட்டக் கிளர்ச்சிகளின் காரணமாக, பகலில், எல்லா பஸ் டிராம் போக்குவரத்துக்களும் நின்றுவிட்டனவாம்.

மாலைப் பொழுது நெருங்க நெருங்க மீண்டும் ஆர்ப்பாட்டத்தின் நிலை உச்சகட்டத்தை அடைந்ததாம்! பாதையோரங்களில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பஸ்களையெல்லாம் ரோட்டின் நடுப்பாகத்திற்கு இழுத்துச் சென்று அவற்றில் ஏறிக்கொண்டு போலிசார் மீது கற்களை வீசினராம். போலீசாரின் எதிரிலேயே இரண்டு பஸ்களைத் தீக்கிரையாக்கினதுடன், பலரைத் தாக்கித் துன்புறுத்தினர் என்றும் கூறப்படுகிறது.

பஸ், டிராம்கள் ஆகியவை மட்டுமின்றி, பல நகரச் சுற்றுப்புற இரயில் வண்டிகளும் கல்வீச்சுக்கு ஆளாக்கப்பட்டனவாம்; இரயில் பெட்டிகளின் ஜன்னல், கதவுகள் ஆகிய எல்லாவற்றையும் அதிகாரிகள் மூடிவிட்டு இரயில் வண்டிகளை ஓட்டிச் சென்றனராம்

பஸ்களையும், டிராம் வண்டிகளையும் தீயிட்டதுடன் மட்டுமல்லாமல், ஆர்ப்பாட்டக்காரர்கள்; வட பகுதியிலுள்ள தொழில் பகுதியொன்றில் அமைக்கப்பட்டிருந்த போலீஸ் நிலையத்தையும்கூட தீயிட்டுக் கொளுத்திவிட்டனராம்!

சௌபாத்தி எனுமிடத்தில், நகரில் விதிக்கப்பட்டுள்ள தடையுத்தரவைக் கண்டிப்பதற்காக நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றினைக் கலைப்பதற்காகப் போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும், ஒருவருக்குக் காலில் குண்டடிபட்டது என்றும் கூறப்பட்டிருக்கிறது. தடையுத்தரவை மீறி அக்கூட்டம் நடைபெறக் கூடாதென்பதற்காக, அதனைக் கலைக்க வந்த போலீசார், பின்னர் சட்டசபை எதிர்க்கட்சி உறுப்பினர்களின் வேண்டுகோளையொட்டி கூட்டம் தொடர்ந்து நடைபெற அனுமதித்திருக்கின்றனராம்.

மா. பு. குழு சிபாரிசு பற்றி விவாதம்

தோழர் கே. ஏ. மதியழகன் கலந்துகொண்டார்

சென்னை, நவ 21—

மாநில புனரமைப்புக் குழுவின் சிபாரிசுகள் குறித்து, சென்னை மைலாப்பூர் பி. எஸ் உயர்நிலைப் பள்ளியில், தென் மைலாப்பூர் இளைஞர்கள் சங்கத்தின் சார்பில் விவாதக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் தோழர்கள் கே. ஏ. மதியழகன், க. அறிவழகன் (தி. மு கழகம்), மற்றும் தோழர்கள் கே. விநாயகம் எம் எல். ஏ, வி. கே ஜான் (மேல் சபை எதிர்க்கட்சித் தலைவர்) ஏ சுப்பிரமணியம் (ம. சோ.), எஸ் ஆர். வெங்கடராமன், எம். கல்யாணசுந்தரம் (கம்யூ); பரசுராம் ஜெகநாத் ஆகியோர் சொற்பொழிவாற்றினர். சங்கத் தலைவி திருமதி விசயலட்சுமி வரவேற்புரை நிகழ்த்தினர்.

கூட்டத்திற்கு திரு. எச். டி ராஜா எம். எல. சி., தலைமை வகித்தார்.

தாமதத்திற்குக் காரணம் சட்ட நுணுக்கமாம்!

அமைச்சர் மாணிக்கவேலர் கூறுகிறார்!

சேலம்—

மகசூல் மசோதா ஒன்றை சட்டசபையில் கொண்டுவர இருப்பதாயும், இந்த மசோதாவினால் நிலத்தில் விளையும் மகசூலில் மூன்றில் ஒரு பாகம் நிலத்தை உழுபவர்களுக்கும், மூன்றில் ஒரு பாகம் நிலச் சுவான்தாருக்கும், மீதியை உழவுச் சாமான்கள், மற்றும் இதர செலவுகளுக்கும் பங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், சில சட்ட நுணுக்கத்தின் காரணமாக இந்த மசோதாவை உடனடியாகக் கொண்டுவர முடியவில்லையென்றும், மத்திய சர்க்காருடன் இது சம்பந்தமாகக் கடிதப் போக்குவரத்து நடந்துவருவதாகவும் அமைச்சர் மாணிக்கவேலர் திறப்பு விழா ஒன்றின்போது பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அண்ணுதுரை கரூர் வருகை

★

"25-11-55 மாலை 5 மணிக்கு, கரூர் ரோட்டரி கிளப்பில் தோழர் சி.என். அண்ணுதுரை அவர்கள் சொற்பொழிவாற்றுவார்.

அன்று மாலை 7 மணிக்கு, கரூர் ஈஸ்வரன் கோவில் வடபுறம் உள்ள மைதானத்தில், தோழர் கே. ஏ. முருகேசனுர் தலைமையில், தி. மு. கழகக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் சி. என். அண்ணுதுரை, ஈ. வெ கி. சம்பத் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இராமநாதபுர மாவட்ட தி. மு. கழக (கிளை) செயலாளர்கட்கு

★

"நமது மாவட்டத்தின் மாநில மாநாட்டு பங்குத் தொகையாகிய ரூ. 2,000-த்தையும் இம்மாத இறுதிக்குள் நாம் பூர்த்தி செய்ய வேண்டிய அவசியத்திலிருப்பதால், இதுவரை தமது பங்குத் தொகைகளை கொடுக்காதிருக்கும் கிளைக் கழகச் செயலாளர்களும், குறைவாகக் கொடுத்த செயலாளர்களும் உடனடியாக நிதி வசூலில் ஊக்கம் செலுத்தி, கிளைக் கழகத்தின் பங்குத் தொகையைப் பூர்த்தி செய்து எனக்கு அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்ளுகிறேன். மாநில மாநாட்டுக்கு தன் பங்குத் தொகையைப் பூர்த்தி செய்த கிளைகளுக்கே அண்ணு அவர்கள் நமது மாவட்ட சுற்றுப்பயணத்தின் போது கலந்துகோள்வார். எனவே, பங்குத் தொகையை அனுப்பாத கிளைகள் உடனடியாக அனுப்பினால், அண்ணு அவர்கள் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்,"

என்று, இராமநாதபுரம் மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இ. ல. ம சௌந்திரபாண்டியன் அறிவிக்கிறார்.

சென்னை 43—வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

23—11—55 இரவு 8 மணிக்கு, சென்னை 43-வது வட்ட தி. மு கழகச் செயற் குழுக் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும் அதுபோது, கடந்த பொதுக்கூட்ட வரவு-செலவு கணக்கு, கிளைக் கழகத்தின் கடந்த மூன்று மாத வரவு-செலவு கணக்கு, மற்றும் பல பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

பொன்மலை திராவிட வாலிபர் கழக உறுப்பினர்கட்கு

"21 11-55 மாலை 6 மணிக்கு, பொன்மலை - மேலக்கற்கண்டார் கோட்டை தோழர் கிருஷ்ணமூர்த்தி இல்லத்தில், பொன்மலை திராவிட வாலிபர் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெறும் அதுபோது, கழகத் தோட்டம் சம்பந்தமாக ஆராயப்படும்,"

என்று, மேற்படி கழகத் தலைவர் தோழர் ஜி. பராங்குசம் அறிவிக்கிறார்.

திருக்குறள் வகுப்பு

23—11—55 மாலை 6 மணிக்கு, சென்னை-புரசைபாக்கம், எண் 100, வேளாளத் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில் தோழர் க அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

அரசியல் கிளர்ச்சிகளில்...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

"எட்டுத் தலைகளுடன் காட்சி தரும் கோர மிருகம் ஒன்றைக் கனவில் பார்ப்பதைவிட, கண்ணுக்கினிய கனவைக் காண்பதில் தவறென்ன? அது போலத்தான் நாமும் நல்ல நேர் கனவு காண்கிறோம். திராவிட நாட்டின் விடுதலையை அந்தக் கனவில் காண்கிறோம். திராவிட நாட்டு விடுதலை, கனவாக இருந்தாலும் நல்ல கனவு—நல்ல கனவு என்பது மட்டுமல்ல; நாம் காணுகின்ற அந்த நல்ல கனவு நிச்சயம் நிறைவேறும் என்ற நம்பிக்கையுடன்தான் இருக்கிறோம்.

"நமது இயக்க மாணவர்கள், மற்ற மாணவர்களைவிட அதிகத் திறமை வாய்ந்தவர்களாக இருக்க வேண்டும்; கல்லூரிகளில் பயிலுங்காலை, ஆசிரியர்களால் பாராட்டப்பட்டு, மற்ற மாணவர்களால் விரும்பப்பட்டு, நாட்டு மக்களால் வெறுக்கப்பட்டு வந்தாலும்கூட மாணவர்கள் மிகுந்த திறமையுடையவர்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட திறமையுடையோர் நம்மிடையேயும் இருக்கின்றனர்; அவர்கள் அனைவரையும் நம் நாட்டிற்குப் பயன்படுத்த வேண்டும்,

"காங்கிரஸ் இயக்கம் மாணவர்களை ஒரு பக்கம் அழைத்துச் செல்கிறது; கம்யூனிஸ்டு கட்சி அவர்களை மற்றோர்புறம் அழைத்துச் செல்கிறது; ஆனால், திராவிட முன்னேற்றக் கழகமோ, நாட்டு மக்களிடையே அறிவைப் புகட்ட—பரப்ப மாணவர்களைத் திரட்டுகிறது அத்துடன், மாணவர்கள் தங்கள் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கப்படாத கருத்துக்கருவூலங்களைப் பெற திராவிட இயக்கத்தில் தொடர்புகொள்ளச் செய்கிறது.

"மாணவர்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்க வேண்டும்? அவர்கள், எல்லாத் துறைகளைப் பற்றிக் கொஞ்சமும், ஏதாவது சில துறைகளைப்பற்றி மிக நன்றாகவும் தெரிந்திருக்க வேண்டும்—ஏதாவது குறிப்பிட்ட ஒரு துறையில் நல்ல அறிவு பெற்றிருந்தாலும்கூட, மற்ற மற்றத் துறைகள் அலுவல்கள் குறித்தும் சிறிதளவு தெரிந்துவைத்துக்கொள்ள வேண்டும். ஒரு துறையில் நல்ல அறிவு பெற்றிருப்பவரிடம், ஓவியத் துறை பற்றிக்கேட்டால், அவர் ஓவியத்திற்கு வர்ணங்கள், எழுதுகோல், ஓவியம் எழுதப்படும் பொருள் ஆகியவை தேவை என்பதையாவது தெரிந்து கொண்டிருக்க வேண்டும்.

"பொதுவாகவே விடுதலைப் போராட்டம் என்பது ஒரு நீண்ட தொடர்கதைதான். ஒரு தொடர்கதைக்குப் பல அத்தியாயங்கள் இருப்பது போலத்தான, விடுதலைப் போராட்டமான தொடர் கதையிலும் பலப்பல அத்தியாயங்கள் இருக்கின்றன.

"'திராவிடர்' என்ற வார்த்தை—'திராவிட நாடு' என்ற ஒரு சொல்—இன்று, எல்லோருடைய வாயாலும் சொல்லப்படுவதற்கே பத்து ஆண்டுகள் பிடித்திருக்கின்றன என்பதை நாம் நன்றாக அறிந்திருக்கிறோம்; அப்படிப்பட்ட தொடர்கதை போன்ற விடுதலைப் போராட்டத்தின் இறுதி அத்தியாயத்தின் போதுதான் கடைசி எதிரிகளும் தோன்றுவர். நமது நாட்டு விடுதலைப் போராட்டத்தின்போதும், நம்மை எதிர்நோக்கி வருகிற இறுதி எதிர்ப்பு நேரத்தின்போதும், மாணவர்கள் அனைவரும், யாரும் அழைப்புவிடாமலே தாமாகவே வந்து கலந்து கொள்ளலாம். தங்களை யாரும் கூப்பிடவில்லையே—என்று எண்ண வேண்டாம். யாரும் கூப்பிட்டாலும், கூப்பிடாவிட்டாலும், தாங்களே நேரில் கலந்துகொள்ளலாம்.

"பிரெஞ்சுப் புரட்சியை அறியாத நாடில்லை; அதுபற்றி எடுத்துச் சொல்லப்பட்டவைகளை சிந்திக்காத நாடில்லை; நாம் அறிந்தது போல், மாற்று நாட்டவரும் அறியும்படி ரூசோ போன்றவர்கள் எடுத்துரைத்தனர்; அப்படிப்பட்ட அந்த மகத்தான புரட்சியின் போதும், இறுதிப் படையாக ஒரு எதிர்ப்புப் படை வரத்தான் செய்தது. என்றாலும், பாஸ்டைல் சிறை உடைக்கப்பட்டது—சின்னபின்னமாக்கப்பட்டது அதே போன்றுதான், புரட்சி நேரத்திலே கடைசிப் பட்டாளம் திடீரென்று தோன்றத்தான் செய்யும் அந்த நேரங்களில், மாணவர்கள், களம் வரமுடியாதோ என ஏங்கவேண்டாம்.

"அந்த விடுதலைப் போரின் போது, மாணவர் பட்டாளம் களம் வரவும், போர்க்களத்தில் வெற்றிபெற்று, தோரணங்கள் அமைத்து, வெற்றிக்கொடி நாட்டி திராவிட முன்னேற்றக் கழகம் அவர்களை அழைக்கும். இதற்கிடையிலுள்ள நாட்களில் மாணவர்கள் தங்கள் அறிவை வளர்த்துக் கொள்ளத்தான் வேண்டும். ஏனெனில், அவர்கள் அந்த நேரத்தில் பெறுகிற அறிவு, விடுதலைக்கு மிக மிக அடிப்படையான ஒன்றாகும்:

"நாட்டில்இன்றிருக்கும்மக்களும் நல்லமுறையில். இல்லை. பெரும்பாலான மக்கள் இப்போதுதான் அரசியலிலே பக்குவம் பெற்று வருகின்றனர். கல்லூரிகளிலே பயிலும் மாணவர்கள் இந்த நேரத்திலெல்லாம், பக்குவம் பெறுவருகிற அந்த மக்களையெல்லாம் நமது பாசறைக்கு இழுத்து வரும் பணியில் ஈடுபடவேண்டுமென்றுதான் நான் கேட்டுக்கொள்கிறேன்

"அப்படி அவர்களை நம் பாசறைக்கு இழுத்து வருவதற்கான பயிற்சிக்குக் கல்லூரி மட்டும் போதாது—இத்தகைய இயக்கங்கள்தான் தேவை.

"நாட்டுக்குத் தங்கள் நல்லுழைப்பைத்தர—ஆக்க வேலைகளில் தங்களை ஈடுபடுத்த—நாம் விடுகிற அழைப்பினை ஏற்று திராவிட நாட்டு விடுதலை பெற எதிர்காலத்தில் கல்லூரிகளையே பாசறைகளாக்கும் வேலையில் மாணவர்கள் ஈடுபட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

செங்கற்பட்டு மாவட்ட

தி.மு. கழக உறுப்பினர்கட்கு

★

"27—11—55 காலை 9 மணிக்கு காஞ்சீபுரம், 'திராவிட நாடு' அலுவலகத்தில், செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். அதுபோது, மாநில மாநாட்டு நிதி, பொதுக் குழுவுக்கு ஒரு உறுப்பினர் தேர்ந்தெடுத்தல் ஆகியவை ஆய்வுக்கு வரும்,"

என்று, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. டி எஸ் மணி அறிவிக்கிறார்.

பொதுக்கூட்டம்

23—11—55 மாலை 7 மணிக்கு, மேவாணி சந்தைப்பேட்டை மைதானத்தில், மேவாணி பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பாக, தோழர் மே ரா. பொன்னு தலைமையில் நடைபெறும். தோழர்கள் கோவை செழியன், அன்பரசு ஆகியோர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.